C.O.S.No.40/2019 தேதி – 02.07.2025

வா.சா.1. – கார்த்திகேயன்

4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

இந்த வழக்கு தாக்கல் வா.சா.ஆ.2 ன் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் இந்த வழக்கின் பிரதிவாதிகள் பெயர் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்ய தீர்மானத்தின் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் பொதுவாக சொல்லப்பட்டுள்ளது. அதுபோல் நான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் எனக்கு எந்தவிதமான நீதிமன்றத்திலும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் பிரகாரம் நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கு மட்டுமே அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் எதுவும் அளிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ன் படி பிராது தாக்கல் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்படாததால் நான் தாக்கல் செய்த வழக்கு சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. பிராதில் ஏ தபசில் சொத்தாக எனது டிரேடு மார்க் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி தபசில் சொத்தை பிரதிவாதிகள் பயன்படுத்தி வந்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பி தபசில் சொத்து டிரேடு மார்க் குறியீடு தென்றல் மேச் இன்டஸ்ட்ரீஸ் சிவகாசி என்ற நிறுவனத்தின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேலும் எஸ்.ஆர் மேச் என்ற பெயரிலும் அடித்துள்ளார் என்று சாட்சியம் அளிக்கிறேன். தென்றல் மேச் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எஸ்.ஆர் மேச் நிறுவனம்தான் தென்றல் மேச் பெயரில் வியாபாரம் செய்து வருகிறார். பிரதிவாதிகள் நிறுவனம் எஸ்.ஆர் மேச் என்ற பெயரில் பல்ப் சின்னத்தை அச்சடித்து வியாபாரம் செய்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு ஆகும். எஸ்.ஆர் மேச்

லேபில் எனது கைவசம் இருந்தும் அதை நான் வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி தபசில் சொத்துக்கும், பிரதிவாதிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**